Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

வருகையின் தூதன்

Vol. 69 | அவரை நித்திய ஆசீர்வாதங்களுள்ளவராக்குகிறீர்; சங்.21:6 | நவம்பர் 2023 | No.11

பாவ அறிக்கை ஜெபம் செய்ய மனந்திரும்பிய இருதயம் வேண்டும்

The prayer of confession requires a repentant heart

Kim Butts

நமது ஜெபங்களில் குறை படுவதும், உதாசீனப்படுத்தப்படுவது மான இரு பகுதிகள் பாவ அறிக்கையும் மனந்திரும்புதலுமாகும். நாம் எல்லோரும் பாவஞ்செய்து தேவ மகிமையை இழந்து விட்டோம். உத்தம மனந்திரும்புதலோடு தேவனிடம் வந்து பாவமன்னிப்புக்காகக் கேட்டால் தேவ கிருபையால் அது இலவசமாகக் கிடைக்கும். இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை இரட்சிக்கக் கூடியது. கிறிஸ்தவர் களாகிய நாம் இதை அறிந்து விசுவாசித் தால் ஏன் நிர்விசாரமாயிருக்கிறோம்?

பாவ அறிக்கை பல வேளைகளில் கவனிக்கப்படாமலோ, வெளிப்பூச்சாக வோ, தனிப்பட்ட மற்றும் குழு ஜெபங்களில் ஏறெடுக்கப்படுகிறது. சில பாவங்களின் பாரம் நம்மை உணர்வற்ற வர்களாகவோ செயல்பட முடியாதவர் களாகவோ ஆக்கி விடலாம். அல்லா விட்டால் '**சிறியது**' என்று எண்ணப்படும் பாவச் செயல்கள் தேவனுக்கு முன் கொண்டு வரப்படக் கூடிய முக்கியத்து வமுடையவைகளல்ல என்ற எண்ண மிருக்கலாம். வீண் பேச்சு, வேகமாகக் கடந்து செல்லும் எண்ணங்கள் போன்ற வை முக்கியமல்ல, பாவமல்ல என்று விட்டு விடப்படலாம். நமது கலாச்சாரம் சிறிய பாவங்களை நாம் உணரக் கூடாதவர்களாக்கி விட்டன.

ஒவ்வொரு நாளும் சன்மார்க்க நெறி கெட்டுப் போய்க் கொண்டிருக்கி றது. ஒவ்வொரு பாவத்தையும் '**சிறியது**' தானே (Minor Sin) என்று செய்கிறோம். நமது மனம் தொடர்ந்து எதை உட் கொள்ள சம்மதிக்கிறது? நமது கண்கள் தொலைக்காட்சிப் பெட்டியிலிருந்தும், அசையும் படங்களிலிருந்தும், வாசிக்கும் புஸ்தகங்களிலிருந்தும், நம்மைச் சுற்றிலும் வாழும் மக்களிலிருந்தும் எவற்றைப் பெற்றுக் கொள்கின்றன? சிந்தித்துப் பார்த்தால் நாம் உலகத்திற்கு அதிக இடம் கொடுக்கிறோம். தேவ ராஜ்யத்திற்குக் குறைந்த அளவே இடம் கொடுக்கிறோம் என்பதும் தெரிய வரும். சர்வ வல்ல தேவன் நம்மில் வாழுகிறார் என்பதையும், நாம் தகுதியுள்ளவைகள் என்று எண்ணுகிறவைகளை அவர் எப்படி எண்ணுகிறார் என்று நாம் எண்ணிப் பார்த்தால் நமது மனநிலையே மாறி விடும்.

எதைச் செய்யும் போதும் இது தேவனுக்குப் பிரியமா என்ற கேள்வி யைக் கேட்டுக் கொண்டிருப்போமா னால் விலகியிருக்க வேண்டியவைகளைக் கண்டுபிடிக்கக் கஷ்டமிருப்பதில்லை. நாமோ கிறிஸ்துவைப் பிரதிபலிப்ப தற்குப் பதிலாக உலகத்திலுள்ளவர் களைப் போல காட்சியளிக்கிறோம்.

'**உலகத்தை மாற்றும் நேரம்**' என்ற தமது நூலில் **டிக் ஈஸ்ட்மேன்** இவ்வாறு குறிப்பிடுகிறார். "நாம் எப்படியிருக்கி றோம் என்பதை இதய பூர்வமாக உணர்ந்து கொள்வதே பாவ அறிக்கை. இது தேவன் முக்கியமாக எதிர்பார்க்கும் ஒன்று. ஏனெனில் இதனால் நாம் நமது குற்றங்களையும் தோல்விகளையும் தீவிரமாக எடுத்துக் கொள்வோம். நாம் நமது பாவங்களை அறிக்கையிட தேவன் கூறவில்லை. நாம் பாவிகள் என்பது அவருக்குத் தெரியும். நாம் பாவம் செய்தோம் என்பதை ஒத்துக் கொள் வதையே அவர் விரும்புகிறார்".

நம்மில் பலர் பாவ அறிக்கை செய்யும் போது இருதயம் பூரணமாக உடைக்கப்படுவதில்லை. பிள்ளைகள் தவறு செய்யும் போது தண்டனைக்குப் பயந்து மன்னிப்புக் கேட்பது போல தேவனும் நாம் கேட்டவுடன் மன்னிக் கும்படி எதிர்பார்க்கிறோம். ஆனால் மனந்திரும்புதல் இருப்பதில்லை. "எவனுடைய அக்கிரமத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ, எவனுடைய ஆவியில் கபடமில்லாதிருக்கிறதோ அவன் பாக்கியவான்" சங்.32:2. "தேவனுக் கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிற தற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கு ஏதுவான மனந்திரும்புதலை உண்டாக்கு கிறது. லௌகீக துக்கமோ மரணத்தை உண்டாக்குகிறது" 2 கொரி.7:10.

தேவன் நம்மிடம் எதிர்பார்ப்பது பரிசுத்தம். அது உத்தமமாக மனந் திரும்பிய ஒரு இருதயத்திலிருந்து தான் வெளிப்பட முடியும். நாம் எந்த சூழலில் வைக்கப்பட்டிருந்தாலும் தேவன் நம்மை அழைத்தது பரிசுத்தத்திற்கும் உத்தமத்திற்கும் என்பதை மறக்கக் கூடாது. "பரிசுத்த வாழ்வை விரும்பாத தால் மக்கள் பரிசுத்தமாக ஜெபிக்க வில்லை" என்று E.M. பௌண்ட்ஸ் கூறி யிருக்கிறார். தேவனுடைய உயர்வான அந்தஸ்தை நாம் அடைய விரும்பாத தால் சத்துரு நமது சன்மார்க்க குணத்தை அகற்றிப் போடுகிறான். நாம் கவனமா யிராவிடில் சத்துரு முன்னேறி வர ஆயத்தமாகி நமது பலவீனத்தை சாதக மாக்கிக் கொள்வான்.

தேவன் பரிசுத்தராயிருப்பது போல தேவ ஜனமும் பரிசுத்தமாயி ருப்பதை அவர் விரும்புகிறார். தூய்மை சிறிய அளவிலான பாவங்களுக்கும் அனுமதியளிப்பதில்லை. எந்தப் பாவமும் நம் பிதாவுக்கு துக்கத்தை அளிக்கிறது. நமது அந்தஸ்தை மனிதர் அளக்க வேண்டியதில்லை. அது தேவனு டைய பணி. நமது வாழ்வில் பாவம் இருக்குமானால் அவர் நமது ஜெபத்தை கேட்க முடியாது. டிக் ஈஸ்ட்மேன் என்பவர் பாவ அறிக்கை ஜெபத்தைக் குறித்து "இயேசுக் கிறிஸ்துவில் என் தனிப்பட்ட வாழ்வு என் ஜெப வாழ்வை விட மேலே எழும்புவதில்லை. என் தனிப்பட்ட வாழ்வு உலகத்தை அதிக மாகத் தொடுமானால் எனது ஜெப வாழ்வு பாதிப்புக்குள்ளாகும்" என்று குறிப்பிடுகிறார். என் இருதயத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருந்தால் ஆண்டவர் எனக்குச் செவி கொடார் சங்.66:18. மேலும் ஏசா.59:1-2 வசனங்கள் படிக்க.

டிக் ஈஸ்ட்மேன் தொடர்ந்து "விசுவாசியின் வாழ்வில் பாவம் தன் பிடியை வைத்திருக்குமானால் தேவ வசனத்தின்படி அங்கு ஊக்கமான ஜெப வாழ்வு இருக்க முடியாது. எனவே தான் பாவ அறிக்கை ஜெபத்தில் மிக முக்கியம் என்றும், அது ஆரம்பத்திலேயே செய்யப் பட வேண்டுமென்றும் வலியுறுத்தப் படுகிறது. விசுவாசத்தைக் கொல்லும் குற்றத்திலிருந்து மனச்சாட்சியைத் தெளி வாக்கி தேவன் நிச்சயம் நமது ஜெபத் தைக் கேட்பார் என்று விசுவாசிக்க இருதயத்தைத் திறந்து விடுகிறது".

தேவன் நமது இருதயங்களில் இறங்கி, ஊக்கமான ஜெபத்திற்கான தடைகளை நீக்கிவிட பாவ அறிக்கை உதவுகிறது. 'நீங்கள் ஜெபிக்கும் போது'

(3-ம் பக்கம் பார்க்க)

வாசகர் கவனத்திற்கு

வங்கி வழியாக காணிக்கை அனுப்புகிற வாசகர்கள் தகவல் தராவிட்டால், வாசகர் பெயர் எங்களுக்கு தெரியாதபடியால், ரசீது அனுப்ப இயலாது, பத்திரிக்கையும் அனுப்ப இயலாது.

உடனே எங்களுக்கு SMS or Whatsapp அனுப்புங்கள்

Mobile : **95432 21008**

Whatsapp : **9489740295**

e-mail:varukayinthoothan@hotmail.com

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

வாசகர் கடிதங்கள்

CN 03101 L, 03-09-2023

கர்த்தருக்குள் அன்பான Wesley brother அவர்களுக்கு தேவ ஆசீரும் வாழ்த்துதலும் கூறி எழுதுவது,

உங்களுக்கு தெரிந்தபடி என் வயது 83. எழுத கொஞ்சம் கஷ்டம் இருந்தாலும் நல்ல போராட்டத்தை போராடி ஓட்டத்தை முடிக்க தேவ தயவுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். எனக்கு 2 கால் மூட்டுகளிலும் சொல்லி முடியாத வலி, கம்பு ஊன்றி தான் நடக்க வேண்டும். வெளியே எங்கும் செல்ல முடியாது. டாக்டர்கள் எலும்பு அதிகமாக தேய்ந்து விட்டதால் பூரண சுகம் கிட்டாது. மாத்திரை சாப்பிட்டு அவ்வப்போது வலியை குறைக்க வேண்டும் என்று சொல்லி விட்டார்கள்.

இருந்தாலும் தேவன் மேல் உறுதியாயிருந்து விசுவாசத்தில் பலப்பட்டு காலத்தை ஓட்டுகிறேன். உங்களை போன்ற தேவ ஊழியர்களின் ஜெபமும் பரிசுத்தவான்களின் ஐக்கியமும் என்னை பராமரிக்கிறது.

உங்கள் தகப்பனாரின் ஊழியம் என் மனதில் நிலைகொண்டு நிற்கிறது. உங்கள் ஊழியத்திற்காகவும் ஜெபிக்கிறேன். என்னால் முடிந்த ஒரு சிறு காணிக்கையை Cheque மூலமாக அனுப்பியுள்ளேன், பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் ஜெபத்தை எதிர்பார்க்கிறேன். நிச்சயம் தேவன் பரிகாரியாக இருந்து என்னை நடத்துவார். அன்புடன் முடிக்கிறேன்.

C.N.S.

Praise The Lord

Trichy-21, 09-09-2023

கர்த்தருக்குள் அன்பான சகோதரர் அவர்களுக்கு

தேவனின் இனிய நாமத்தினால் ஸ்தோத்திரம். தங்களுடைய magazine நான் திருமணம் ஆகி திருச்சி வந்த நாளிலிருந்து தவறாமல் வந்து கொண்டேயிருக்கிறது. அல்லேலூயா! தங்களுடைய தகப்பனாரும் எங்களுடைய வீட்டிற்கு வந்து செய்தி கொடுத்தார்கள். கடந்த காலங்களை நினைத்து பார்த்து கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறேன். எனது சகோதரி Nancy Stella-வுக்கு உங்களை அறிமுகம் செய்து வைத்து அவளும் ஊழியத்தை தாங்கி வருகிறாள். தங்களுடைய சகோதரர் D.T. Raja அவர்கள் மகன் Pr. பிரேம் தேவசிங்கும் மகிமைக்குள் பிரவேசித்ததை அறிந்து மிகவும் துக்கமடைந்தேன். மனைவி Stella Margaret-யை கர்த்தர் ஆறுதல் படுத்து வாராக.

வருகையின் தூதன் ஊழியத்திற்கு வருடந்தோறும் மொத்தமாக பணம் அனுப்பி விடுவேன். 2022-ல் அனுப்ப தவறி விட்டது. இப்பொழுதும் காணிக்கை அனுப்பியுள்ளேன். ஊழியத்தை தேவன் தாங்கி நடத்துவாராக. இக்கடிதத்தை வாசிக்கும் போது எனது ஞாபகம் வரும் என நினைக்கிறேன். அநேக சாட்சிகளும் எழுதியுள்ளேன். எனது வயது 86 பிள்ளைகள், பேரப் பிள்ளைகள் யாவருக்காகவும் ஜெபித்து கொள்ளுங்கள். மகன் Diwakar திருமணம் ஆகாமல் என்னுடன் இருக்கிறான். பயத்தின் ஆவி நீங்கவும் திடநம்பிக்கை, விசுவாசம் ஏற்படவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். பேத்தி கிறிஸ்டினா திண்டுக்கல்லில் இருக்கிறாள், அவள் கணவன் ஜோ & மகள் ஜென்னுக்காகவும் ஜெபித்து கொள்ளுங்கள். ஆமென்.

கர்த்தருக்குள் அன்பான, தாயார். M.S.

ஆசிரியர் கடிதம்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

2023 நவம்பர் *மாத பத்திரிகைக்காக 'வெகு மனத்தாழ்மையோடும், மிகுந்த கண்ணீரோடும்' (அப்.20:19) கர்த்தரைத் துதிக்கிறேன்.*

நீங்கள் சுகமாயிருக்கிறீர்களா? அடியேன் மிகவும் சுகவீனப்பட்டு, சில மாதங்களுக்கு பிறகு தேவ கிருபையால் ஆசிரியர் கடிதத்தை உங்களுக்கு எழுதுகிறேன்.

மே மாதம் 14-ம் தியதி இரவு 9.00 மணியளவில் மிகவும் பெலவீனமாயிருந்தபடியால் மருத்துவ பரிசோதனைக்காக அழைத்துச் செல்லப்பட்டேன். ஒரு இரவு மாத்திரம் அவசர சிகிட்சை பிரிவில் இருந்து அறைக்கு அனுப்பப்பட்டு, அடுத்த நாளில் வீடு திரும்ப தேவன் இரக்கம் பாராட்டினார்.

அன்பான வாசகருக்கு . . . .

1. **மாதந்தோறும்** சில தேவ பிள்ளைகள் (வெகு சிலர் மட்டுமே) ரூபாய் 50,100,200,300,500 அதற்கும் அதிகமாக அனுப்பு கிறார்கள். நீங்களும் **மாதந்தோறும்** தாங்குங்கள்.
2. **மாதந்தோறும்** காகிதம், அச்சு கூலி, தபால் செலவுகள், வேலைக்கூலி, சம்பளம் கொடுக்கப்பட வேண்டியதால், எல்லா கிறிஸ்தவ ஊழியங்களையும் போல வருகையின் தூதன் ஊழியத்தையும் **மாதந்தோறும்** தாங்குங்கள்.
3. **மாதந்தோறும்** ரூபாய் 100 அனுப்பிக் கொண்டிருந்த ஒரு சகோதரி, வயதின் காரணமாக வருடத்திற்கு ஒரு முறை ரூபாய் 1200 அனுப்புகிறார்கள். மாதந்தோறும் தபாலில்/வங்கி வழியாக அனுப்ப இயலாத தேவ பிள்ளைகள் வருடத்திற்கு ஒரு முறையாவது குறைந்த பட்சம் **ரூபாய் 500** அனுப்புங்கள்.

ஆனால் அன்று முதல் பிறருடைய உதவியோடு மாத்திரம் வீட்டிற்குள் நடக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இரண்டாவதாக இரவு முழுவதும் தூங்க முடியாது. மூன்றாவதாக உணவின் மேல் வெறுப்பு ஏற்பட்டது. நம்பிக்கை இல்லாத இந்த சூழ்நிலையில் எனது பிள்ளைகளும், உறவினர்களும், உடன் ஊழியர்களும், போதக அன்பர்களும், நண்பர்களும் தினந்தோறும், சிலர் நேரில் வந்தும் ஜெபித்தார்கள். சில போதகர்களும், ஊழியர்களும், சில அன்பான வாசகரும் தொலைபேசியில் என்னை விசாரித்தீர்கள்.

எனக்காக ஜெபிக்கிற ஒரு தேவமனிதர் எனக்கு போன் பண்ணினார்:

இந்த வியாதி மரணத்திற்கு ஏதுவானதல்ல எழுப்பி நிறுத்துவார் முன்பு செய்த எல்லா ஊழியங்களையும் செய்வீர்கள்

தேவ கிருபையால் வீட்டிற்குள்ளே நடக்க ஆரம்பித்தேன். பிள்ளைகளும் ஊழியர்களும் உற்சாகப்படுத்தினதினால் ஜெபிக்க ஆரம்பித்தேன். மிகவும் மெதுவாக அலுவலகமும் வர ஆரம்பித்தேன். தேவன் இரக்கமாய் பரிபூரண சுகம் தருமாறு தினமும் மறவாமல் பாரத்தோடு ஜெபிக்கும்படி மிகுந்த அன்போடும், தாழ்மையுடனும் உங்களை கேட்கிறேன்.

ஒரு வேத பகுதியை கீழே அச்சிடுகிறேன்:

1. அந்நாட்களில் எசேக்கியா வியாதிப்பட்டு மரணத்துக்கு ஏதுவாயிருந்தான்; அப்பொழுது ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா என்னும் தீர்க்கதரிசி அவனிடத்தில் வந்து, அவனை நோக்கி: நீர் உமது வீட்டுக் காரியத்தை ஒழுங்குப்படுத்தும், நீர் பிழைக்கமாட்டீர், மரித்துப் போவீர் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.
2. அப்பெழுது எசேக்கியா தன் முகத்தைச் சுவர்ப்புறமாகத் திருப்பிக் கொண்டு, கர்த்தரை நோக்கி:
3. ஆ கர்த்தாவே, நான் உமக்கு முன்பாக உண்மையும் மன உத்தமமுமாய் நடந்து, உமது பார்வைக்கு நலமான தைச் செய்தேன் என்பதை நினைத்தருளும் என்று விண்ணப்பம் பண்ணி, எசேக்கியா மிகவும் அழுதான்.

(8-ம் பக்கம் பார்க்க)

அறிவிப்புகள்

கடிதம், மணியாடர், கொரியர் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்
நியூபோர்ட் தெரு,
நாகர்கோவில் – 629 001.
Ph. : 95432 21008

VARUKAYIN THOOTHAN
Newport Street,
Nagercoil-629 001.
Ph. : 95432 21008

காசோலை ***(Cheque & Draft)***
வெஸ்லி தேவதாசன் **(WESLEY DEVADASON)**
என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புங்கள்

வருகையின் தூதன் பத்திரிகை பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **2131010118439**
Punjab National Bank, Nagercoil -1. IFSC Code : **PUNB0213120**

வருகையின் தூதன் உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **370601000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA0000063**

வருகையின் தூதன் முன்னேற்றப்பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **61822200136904**
Canara Bank, Ngl-1 IFSC Code : **CNRB0001110**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்ற நூலில் ஹெரால்டு லின்டுசெல் என்பவர் பாவ அறிக்கை ஒரு வகையான ஆவிக்குரிய இரண சிகிச்சை என்கிறார். "பாவ அறிக்கை இருதயத்தில் ஏற்பட்ட காயத்தைக் குணமாக்க செயல்படுகிறது. ஒரு ரண சிகிச்சை மருத்துவர் ஒரு கொப்புளத்தைத் திறந்து அதிலுள்ள தொற்றுகளை வெளியேற்றி அது உள்ளிருந்து குணமடையச் செய்வது போல பாவ அறிக்கை நமக்குள்ளிருக்கும் புண்ணைத் திறந்து நச்சை வெளியேற்றி உள்ளிருக்கும் காயத்தை ஆறச் செய்யும்".

எந்தப் பாவத்தையும் இனி செய்யக் கூடாது என்ற திடம் வேண்டும். "அவரில் நிலைத்திருக்கிற எவனும் பாவஞ் செய்வதில்லை. பாவஞ் செய்கிற எவனும் அவரைக் காணவுமில்லை, அவரை அறியவுமில்லை" *1 யோவா.3:6.*

பாவ பாரம் நம்மை அழுத்தும் வரை நாம் காத்திருக்க வேண்டாம். *சங்.139:23-24* வசனங்களின்படி தேவனிடம் வாஞ்சையோடு வந்து தேவனே வேதனை உண்டாக்கும் வழி என்னிலே உண்டோ என்று ஜெபிப்போம். ஜான் ஆலன் லாவென்டெர **"உங்கள் சூழ்நிலை மாறும்படி ஜெபிப்பதற்கு முன்னால் உங்கள் குணம் மாறும்படி ஜெபியுங்கள்"** என்கிறார். நாம் அவருக்கு முன்பாக பாவ அறிக்கை பண்ணி உத்தம மனந்திரும்புதலைப் பெறும் போது நல்ல கனி கொடுக்கிறவர்களாவோம். **"மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள்"** லூக்.3:8.

மனந்திரும்பி உத்தமமாக ஜெபிக்கும் சபை மீது எழுப்புதலை ஊற்ற தேவன் காத்திருக்கிறார். சன்மார்க்க நெறியின் சீரழிவுக்காகதுக்கப் பட்டு தேசத்துக்காகவும் உலகத்துக் காகவும் ஜெபிக்கும் அவருடைய ஜனத்திற்காக தேவன் காத்திருக்கிறார். "என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களை தாழ்த்தி, ஜெபம் பண்ணி, ... அவர்கள் தேசத்துக்கு ஷேமத்தைக் கொடுப்பேன்." *2 நாளா.7:14* .

"தேவ பிரசன்னத்தில் மனந் திரும்பிய இருதயத்தோடு வந்து, பாவ அறிக்கை செய்தால், அவருடைய கிருபை பாவ மன்னிப்பைப் பெறவும், **ஜெபத்தையே உன்னத** நோக்கமாக கொண்டு ஜெபிக்க நம்மை விடுவித்து, உலகை மாற்றும் ஜெபமாக (World Changing Prayer) தேவ நாமம் மகிமைப்படும் ".

நாம் தேவனை மட்டுப்படுத்தக் கூடாது!

Let not limit God!

Lois J. Stucky (1928-2014)

கிறிஸ்தவனிடம் அவிசுவாசம் என்ற பாவம் இருக்கிறது. விசுவாசிகளுக் குத்தான் எபிரேயர் நிருப ஆக்கியோன், "ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற் கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவருக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையா யிருங்கள்" எபி. *3:12* என்று எழுதுகிறார்.

நல்ல கலாச்சாரமும், மதிப்பும், சன்மார்க்க நெறியில் நடப்பவர்களும், நேர்மையுள்ளவர்களுமான அனேகர் இறுதியில் விசுவாசமில்லாய்மையால் நரகத்திற்கும் செல்வது எத்தனை துக்க மானது! இயேசுவே தேவ குமாரனென்று அவர்கள் விசுவாசிப்பதில்லை. வேத புத்தகம் தேவனுடைய வார்த்தை என்று ஒத்துக் கொள்வதில்லை. தாங்கள் பாவி களென்றும் தங்களுக்கு ஒரு இரட்சகர் வேண்டுமென்றும் அவர்கள் நம்புவ தில்லை.

அவிசுவாசமாகிய பாவம் கிறிஸ்தவர்களாகிய நம்மில் இருப்பதை நாம் கணக்கிட்டுப் பார்க்கிறோமா? நமது அவிசுவாசத்தால் நமக்கும், பிறருக்கும், நம்மூலமாகவும், உலக இரட்சிப்புக்காக தேவன் செய்யவிருக்கும் பெரிய காரியங் களைக் கட்டுப்படுத்துகிறோம். மக்களின் அவிசுவாசத்தால் தமது சொந்த ஊரில் இயேசு பலத்த செயல்களைச் செய்ய முடியவில்லை *மத்.13:58.*

"நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து, எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கி றார்"*1 யோவா.1:9* என்ற வசனத்தின்படி பாவமன்னிப்பை விசுவாசத்தின் மூலம் பெற்றுக் கொள்ள முடியாமலிருக்கி றோமே! தேவனுடைய அற்புதமான வாக்குகள் மூலம் வெற்றி வாழ்வைப் பெறுவதற்குப் பதிலாக இடறுகிறவர் களாயிருக்கிறோம். ஏனென்றால் நமது விசுவாசம் பெருகவில்லை.

தேவனைக் குறித்த கடினமான எண்ணங்கள் தோன்றுகிறதா? தேவன் எங்களை நேசிக்கவில்லை, எனவே இந்தக் கஷ்டங்களைத் தந்திருக்கிறார். அவர் பட்சபாதமுள்ளவர். நான் அவரைப் பிரியப்படுத்த முயற்சிப்பதில் பயனில்லை.... என்றெல்லாம் எண்ணு கிறீர்களா? அவிசுவாசம், பெருமை, சுயபரிதாபம் ஆகியவற்றால் தேவனைப் பற்றிய தீமையானதும் தகுதியற்றதுமான எண்ணங்கள் உருவாகின்றன. இந்நிலை யில் முழுமனதோடு சாத்தானது பொய் களை எதிர்த்து உடனடியாக தேவ வசனத்திற்கு நேராகத் திரும்புங்கள். அவருடைய மாறாத அன்பு, வல்லமை, ஞானம் ஆகியவற்றை நினைவு கூருங்கள் அல்லது வேத வசனங்களைப் படியுங்கள். அவரது குணாதிசயங்களைக் குறித்தும் அவரது வழிகளைக் குறித்தும் நீங்கள் அறிவதென்ன? நடைபெறும் சம்பவங் களைப் புரிந்து கொள்ளுகிறோமா? வேத வசனம் உண்மை என்று அவற்றின் மூலம் அறிய முடிகிறதா? நாம் அவிசுவாசத் திற்கு இடங்கொடுத்து தேவனை துக்கப்படுத்தி விடுகிறோம். பின்பு வெட்கத்தோடும் துக்கத்தோடும் மனந் திரும்புகிற சந்தர்ப்பங்களுமுண்டு.

எந்த சோதனைகள் இழப்புகள் போன்றவற்றை நமக்கு அனுப்புவது தகுதி என்று தேவன் கண்டு அவற்றை அனுப்பவும், அனுமதிக்கவும் செய்யும் போது தாழ்மையுடனும் நன்றியுடனும் பெற்றுக் கொள்ள தேவன் உதவி செய்வாராக. அவர் தமது பிள்ளை களுக்கு வைத்திருக்கும் நிறைவான ஆசீர் வாதங்களையும், அவர்கள் மூலமாகச் செய்யவிருக்கும் நிறைவான செயல் களையும் செய்து நிறைவேற்ற அவர் கிரியை செய்து கொண்டிருக்கிறார். அப்படிப்பட்டவர்களில் நாமொருவரா யிருக்க விரும்பினால் சோதனைகளும் துக்கங்களுமுண்டு.

இந்த நாட்கள் தீமை நிறைந் ததும், நிச்சயமற்றவைகளுமாகும். அவிசுவாசம் நம்மிலிருந்தால் பெரிய கஷ்டங்களை சந்திப்பது எப்படி? நமது விசுவாசம் செழிக்கவும் பெருகவும் செய்தால் மட்டுமே வெற்றி வாழ்வு மேற்கொள்ள முடியும். விசுவாசமும் அன்பும் இணைந்து செயல்பட்டால் தேவன் அதிசயமான காரியங்களைச் செய்ய முடியும். "விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்" *மாற்.9:23.*

நமது இருதயங்களிலிருந்து அவிசுவாசத்தைத் துரத்தி விட்டு விசுவாசத்தாலும், அன்பாலும் நிரப்பா விட்டால் தேவனுடைய பெரிய கட்டளையாகிய, உலகமெங்கும் சென்று சுவிசேஷத்தை எப்படிக் கூற முடியும்! நமக்கு முன்னாகச் சென்ற விசுவாச வீரர்களின் உன்னத சான்றுகள் நமக்கு முன்னிருக்கின்றன. அவர்களுடைய விசுவாசம், ஜெபம் ஆகியவை உலகமெங் கும் சுவிசேஷத்தை அறிவிக்க அஸ்திபார மாயிருக்கின்றன.

ஹட்சன் டெயிலர்

தேவன் ஹட்சன் டெயிலருக்கு சீனாவில் சுவிசேஷம் அறிவிக்க வாசலைத் திறந்து கொடுத்ததோடு, தொடர்ந்து அனேக பக்தர்கள் அங்கு ஊழியம் செய்யவும் அதிசயமாக அவரை பயன் படுத்தினார்.

ஹட்சன் விசுவாசத்தில் உறுதி பெற்றவர். அவரது விசுவாசம் அனேக சோதனைகள் மீது கட்டியெழுப்பப் பட்டது. 1853-ல் அவர் முதலாவது சீனா சென்ற போது அவரது விசுவாசம் மிக அதிகமாக சோதிக்கப்பட்டது. அவர் புறப்பட்டுச் சென்ற சிறிய கப்பல் பிரிட்டன் துறை முகத்தைக் கடந்ததும் ஒரு பெரிய புயலினால் தாக்குதலுக்கு உள்ளாகி 12 நாட்கள் அலைகளால் அலசடிப்பட்டது. இறுதியாகப் புயல் அமர்ந்து காற்று மிகவும் மெதுவாக வீசினபடியால் கப்பல் மிக மெதுவாக நகர்ந்து ஒரு பாறை நிறைந்த கரையை நெருங்கியது.

கப்பல் தலைவன் ஒரு கிறிஸ்தவன். அவன் டெய்லரிடம் வந்து "நாம் இன்னும் அரைமணி நேரம் ஜீவித்திருக்க முடியாது. ஆண்டவர் உம்மை சீன சுவிஷேச ஊழியத்திற்கு அழைத்த அழைப்பு என்ன ஆகிறது?" என்றான். ஏற்கெனவே டெய்லர்

(4-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆவிக்குரிய போராட்டத்திலிருந்தார். அவர் தான் சீனா போய்ச் சேருவதை உறுதியாக நம்பினார். அப்படிச் சேரா விட்டாலும் மரித்தவராகவோ, ஜீவனுள்ளவராகவோ கண்டுபிடிக்கப்பட்டால், அவர் ஆண்டவர் தம்மை சீனாவுக்குச் செல்ல இட்ட கட்டளைக்கு அவர் கீழ்ப் படிந்ததின் நிமித்தம் தான் சந்தோஷப் படுவதாக எண்ணினார். இப்போது காற்று போதுமான அளவில் வேகமாக வீசியதால் கப்பல் மெதுவாகச் செல்ல ஆரம்பித்தது.

ஆனாலும் காற்று திசை மாறி மாறியும் வேகம் மாறியும் அடித்த படியால், கப்பல் காலதாமதமாகவும், சிலவேளைகளில் பின்னாகவும் செல்ல நேரிட்டது. நியூகினியாவுக்கு சமீபமாக வந்த போது திடீரென ஒரு நீரோட்டம் கப்பலை வேகமாக மூழ்கியிருந்த பாறை களுக்கு நேராக இழுத்துச் சென்றது, ஆபத்து நெருங்கியது.

கப்பல் தலைவனும், வேலை யாட்களும் இயன்ற மட்டும் கப்பலைத் திருப்ப முயற்சித்தும் கூடாமற் போ யிற்று. நம்பிக்கை அற்றுப் போனதாகக் கப்பல் தலைவன் டெயிலரிடம் கூறி விட்டான்.

'இல்லை' என்று பதிலளித்த டெய்லர் "நாம் எல்லாவற்றையும் செய்து முடிக்கவில்லை. கப்பலில் நாம் நான்கு கிறிஸ்தவர்களிருக்கிறோம். நாம் அவர வரது அறைக்குச் சென்று ஆண்டவர் உதவி செய்யும்படி ஜெபிப்போம்" என்றார்.

இவ்வாறு அவரவரும் தங்கள் தங்கள் அறைக்குச் சென்று ஜெபிக்க ஆரம்பித்தனர். டெயிலருக்கு தேவன் பதிலளித்த உணர்வு ஏற்பட்டது. அவர் முதல் அதிகாரியிடம் சென்று முக்கிய மான பாயைக் கீழிறக்கும்படி கூறினார். அந்த அதிகாரிக்கு அது பிடிக்கவில்லை. மேலும் பாயைக் கீழிறக்குவதால் எந்த பயனுமில்லை என்று அவர் எண்ணி னார்.

டெய்லர் அவரிடம் "நான் தேவனிடம் கேட்டு விட்டேன், எனவே காற்று சரியாக வீசப் போகிறது" என்றார். அதிகாரி அப்படியல்ல என்றார். அதே வேளையில் உச்சியிலிருந்த பாய் தென்றல் காற்றினால் சற்று அசைந்தது. இந்த சிறிய அசைவால் பயனில்லை என்று அதிகாரி வெறுப்புடன் கூறிவிட்டு டெய்லரின் கட்டாயத்தால் முக்கிய பாயைக் கீழ் இறக்கினான். ஒரே நிமிடத்தில் காற்று பாய்மரத்தின் மீது சீராக வீசியதால் கப்பல் மறுபடியும் பாதுகாவலுடன் சென்றது.

"இவ்வாறு சீன கடற்கரையில் இறங்குமுன் தேவன் என்னை உற்சாகப் படுத்தினார். ஒவ்வொரு தேவை யினையும் ஜெபத்தின் மூலம் அளித்து தேவ நாமத்தை மகிமைப்படுத்தி ஒவ்வொரு இக்கட்டிலும் தேவையான உதவியைத் தந்தார்" என்று டெய்லர் சாட்சி கூறியுள்ளார்.

இதுவே நமது வேளை

இது தேவன் நம்மைப் பிடிக்கும் காலமாயிருக்கலாம். அவரது முழுமை யான திட்டம் நிறைவேறப் போகிறது. நமக்காக தேவன் அமைத்த ஒரு திட்ட முண்டு. இது என்னால் கூடாது என்று கூறி தேவனை மட்டுப்படுத்தக் கூடாது. மக்களின் நித்திய ஆக்கினை தராசில் நிற்கிறது. எல்லாவற்றிலும் தேவனுக்குக் கடமைப்பட்டவர்களாகி நாம் அன்பிலும் விசுவாசத்திலும் தேவன் எதிர்பார்க்கும் இடத்தை நாம் நிரப்ப வேண்டும். ஆண்டவருக்காகவும், ஆத்துமாக்களின் இரட்சிப்புக்காகவும் இவைகளைச் செய்ய வேண்டும். வயது முதிர்ந்து விட்டால் என்ன? சக்கர நாற்காலியில் அமர்ந்திருக்கும் நிலை ஏற்பட்டாலும் பயமென்ன? பணி நெருக்கமான இல்லத் தலைவியாகவோ, பலரை போஷிக்க வேண்டிய பொறுப் புள்ளவர்களாகவோ இருக்கலாம்.

நேரடியாகச் செல்லுகிறவர் களுக்கு எதிரிகள் ஏராளம். ஜெபத்திலும், உக்கிராணத்துவத்திலும் நமக்குப் பங்குண்டு. அதிகமான அழுத்தங்களும், போராட்டங்களும் ஏற்பட்டு விசுவாசம் பரிசோதிக்கப்பட்டு நிரூபிக்கப்பட வேண்டும். தேவன் நம்மை அதிகமதிக மாக நேசிக்கிறார். நாம் அதை உணருவ தில்லை. அவரது சாதுவான தன்மை, ஞானம் போன்றவற்றை நமக்கு அளிப்ப தற்காகவே சோதனைகளைத் தருகிறார். அவற்றின் மூலம் பல்வேறு நன்மை களையும், அவரோடு இணைந்து பணி செய்கிறோமென்ற சந்தோஷத்தையும் தருகிறார்.

ஆண்டவராகிய இயேசு நாம் அறியாத அனேக பாடுகளைக் கடந்து சென்றார். அவர் பிதாவை அதிகமாக விசுவாசித்தார். எனவே இயேசுவைப் பின்பற்றுகிறவர்களாகிய நாம் சோதனை களையும், பாடுகளையும் கடந்து சென்றே ஆக வேண்டும். மேலும் ஜெபம் என்னும் கச்சையைக் கட்டிக் கொண்டு, வேத வசனமாகிய ஆவியின் பட்ட யத்தை எடுத்துக் கொண்டு, விசுவாச மாகிய கேடயத்தைப் பிடித்துக் கொள்ள வேண்டும். நமது பணி நமக்கு அருகி லிருக்கிறது. இரத்த வேர்வை சிந்தி னாலும், கண்ணீர் விட்டுக் கதறினாலும் ஆண்டவரின் வெற்றியில் நமக்குப் பங்கு உண்டு. எனவே ஆண்டவரை நாம் கட்டுப்படுத்தி, அவர் நமக்காக வைத்து வைத்திருக்கும் முழுமையான ஆசீர் வாதங்களை இழக்க வேண்டாம்.

எதிரான ஒரு கலாச்சாரத்தில் மேற்கொள்ளும் வாழ்வு

வெறும் நேர்மறையான ஆலோசனை களல்ல, கடினமான சத்தியங்கள் தேவை:

சபை அதின் தேவைகளை உணர்ந்து போதிக்க வேண்டும். அது தேவனுக்கு முன்பாக நிற்கும் போது நீதியுள்ளதாகக் காணப்பட ஆயத்தப் படுத்தப்பட வேண்டும். பூமியில் எப்படி வாழ வேண்டும் என்பதை போதித்து வரப்போகிற வாழ்வுக்கு ஆயத்தத்தையும் செய்ய வேண்டும். நரகத்தைக் குறித்துப் பேச பயப்படக் கூடாது.

பல்வேறு பாடுகள் சபையில் வரும் போது தேவன் நமக்கு எதிராயிருக்க வில்லை, நம்மோடேயே இருக்கிறார் என்பதை சபை புரிந்து கொள்ளச் செய்ய வேண்டும். தேவன் நம்மோடிருப்பதை நமக்குக் காண்பிக்கவும் நம்மை சோதித்துப் பார்க்கவும் பாடுகள் வருகின்றன.

சபை மக்கள் ஆவியால் நிரப்பப் பட்டு, உண்மைக் கிறிஸ்தவர்களாக வாழ்ந்தால் அரசியல் தலைவர்கள், நீதிபதிகள் அயலார் யாவருடைய தயவையும் நாம் பெற முடியும் என்பது பொதுவான கருத்து. ஆனால் சபை சரித்திரமும், வேத வசனமும் இதற்கு சாதகமல்ல. எவ்வளவு அதிகமாக நாம் கிறிஸ்துவுக்காக வாழ்கிறோமோ, அவ்வளவுக்கதிகமாக எதிர்ப்புகளை நாம் எதிர் நோக்கலாம். "அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப் படுவார்கள்" *2 தீமோ.3:12.*

நாம் பாடுபட அழைக்கப் பட்டுள்ளோம் என்ற உபதேசம் சபைகளில் புறக்கணிக்கப்படுகிறது. பவுல் அப்போஸ்தலன் பிரசங்கிக்க மட்டுமல்ல, பாடுபடவும் அழைக்கப்பட்டார். பவுலாக மாற்றப்பட்ட சவுலை அனனியா புரிந்து கொள்ளாத போது கர்த்தர் அனனியாவிடம், ".... அவன் புறஜாதிகளுக்கும், ராஜாக்களுக்கும், இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்து கொண்ட பாத்திரமாயிருக்கி றான், அவன் என்னுடைய நாமத்தினி மித்தம் எவ்வளவாய்ப் பாடுபட வேண்டு மென்பதை நான் அவனுக்குக் காண்பிப் பேன் என்றார்" அப்.9:15-16.

பாடுகள் ஆசீர்வாதத்திற்கு வழி நடத்துகின்றன. சபையைக் குறித்துப் பேசிய அப்போஸ்தலன், ஆகையால் "உங்கள் நிமித்தம் நான் அனுபவித்த உபத்திரவங்களினால் நீங்கள் சோர்ந்து போகாதிருக்க வேண்டிக் கொள்கிறேன். அவைகள் உங்களுக்கு மகிமையாயிருக் கிறதே" எபே.3:13 என எழுதுகிறார். பேதுரு நம்மிடம் "நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்திக்கப்பட்டால் பாக்கியவான்கள், ஏனென்றால் தேவனு டைய ஆவியாகிய மகிமையுள்ள ஆவி யானவர், உங்கள் மேல் தங்கியிருக் கிறாரே" 1 பேது.4:14 என்கிறார்.

மத்திய கிழக்கில் வாழும் கிறிஸ்தவர்கள் தங்கள் வீடுகளிலிருந்து துரத்தப்படுகிறார்கள். இஸ்லாம் தலை தூக்க அவர்கள் கொல்லப்படுகிறார்கள். அவர்கள் கிறிஸ்தவர்களாயிருப்பதாலும் திரியேக தேவனை வணங்குவதாலும்,

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இயேசு கிறிஸ்துவை தேவ குமார னென்று கூறுவதாலும் தேவ தூஷணம் சொல்லுவதாக குற்றப்படுத்தப்பட்டு மரண தண்டனை பெறுகிறார்கள். நியாயத்தீர்ப்பு நாளில் அவர்கள் நிச்சய மாக மேன்மையான பரிசினைப் பெறு வார்கள்.

பாடுபடும் போது எப்படி நடந்து கொள்ள வேண்டும்

"...அந்த நாட்களில் உபத்திரவங் களாகிய மிகுந்த போராட்டத்தை சகித் தீர்களே. நிந்தைகளாலும், உபத்திரவங்க ளாலும் நீங்கள் வேடிக்கையாக்கப்பட் டதுமல்லாமல், அப்படி நடத்தப்பட்ட வர்களுக்குப் பங்காளிகளுமானீர்கள். நான் கட்டப்பட்டிருக்கையில் நீங்கள் எனனைக் குறித்து பரிதபித்து ...உங்கள் ஆஸ்திகளையும் சந்தோஷமாய்க் கொள் ளையிடக் கொடுத்தீர்கள். ஆகையால் மிகுந்த பலனுக்கேதுவான உங்கள் தைரி யத்தை விட்டு விடாதிருங்கள். நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெறும்படிக்கு, பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது" எபி.10:32-36.

மேற்குறிப்பிடப்பட்டவர்கள் சுவிசேஷத்திற்காக 1. பகிரங்கமாக பாடு களுக்குத் தங்களை ஒப்புக் கொடுத்தனர். 2. சிறையிலடைப்பட்ட போதும் பிற விசுவாசிகளுடன் தொடர்பு கொண் டனர். 3. தங்கள் ஆஸ்திகள் கொள்ளையி டப்பட சந்தோஷமாக ஒப்புக் கொண்டனர். 4. இவை இயேசுவை நேசித்தபடியால் ஏற்பட்டது அது தகுதியானது என்றும், அவர்களது பரிசு மிகப் பெரிது என்றும் நம்பினார்கள்.

"பாடுகள் ஆதிக்கிறிஸ்தவர்களை யும், சீன சபையையும் உண்மையுடைய வர்களாக நிரூபித்தது. அவர்கள் சுவிசேஷத்தை மட்டும் முதன்மையாகக் கொண்டிருக்கவும், தேவையற்றவை களையும், சபை பாரம்பரியங்களையும் பற்றிக் கொள்ளாமலிருக்கவும் பாடுகள் அவர்களை சுத்திகரித்தது" என்று ஒரு ஃபோர்ஜே மிஷன் பயிற்சியாளர் கூறியிருக்கிறார்.

உள்ளே மட்டுமல்ல வெளியேயும் பார்க்க வேண்டும்

மக்களையும் அவர்களது ஆழமான தேவைகளையும் இருதயத்தில் கொள்ளாதவர்கள் தேவனை இருதயத் தில் ஏற்க முடியாது. தன்னிலே திருப்தி கொள்ளும் சபை நிலைத்திருக்க முடியாது. அயலாருடைய எண்ணங் களை ஒப்புக் கொள்ளாத சபை விரைவில் வாடிப் போகும்.

கிறிஸ்து போதகர் மட்டுமல்ல...

ஜீவனுள்ள சபை கிறிஸ்துவைத் தலையாகக் கொண்டு முற்றிலும் தன்னை அவரது ஆளுகைக்குள் வைத் திருக்கும். வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமுடையவருக்கு தன்னை அர்ப் பணித்திருக்கும். அவர் சபைக்கு மட்டு மல்ல உலகமனைத்திற்கும் அதிகாரி.

கிறிஸ்துவைப் பின்பற்றும் சபை தாழ்மை, நொறுங்குண்ட இருதயம் ஆகிய தன்மைகளை உடையதாயிருக்க வேண்டும். தேவ நாமம் மகிமைப் படுவதே அதின் ஒரே நோக்கமாயிருக்க வேண்டும். சுவிசேஷத்தை அறிவிக்கத் துணிச்சல் வேண்டும். கிறிஸ்துவுக்காக எந்த தியாகத்தையும் செய்யக் கூடியதாக வும், பிறருக்காகவே வாழுவதாகவும் இருக்கும் சபை முக்கிய இடத்தைப் பெறும்.

பாடுகள் பெருகின ஆதித்திருச் சபையின் காலத்தில் தேவன் என்ன செய்து கொண்டிருந்தார்? யாக்கோபு அப்போஸ்தலன் பட்டயத்தால் கொல்லப் பட்டான் என ஆரம்பிக்கும் அப்.12-ம் அதிகாரம் "தேவ வசனம் வளர்ந்து பெருகிற்று" எனமுடிகிறது.

ஆயத்தம் பண்ணாத ஒரு எதிர் காலத்திற்கு இயேசு நம்மை நடத்துவ தில்லை. பாதை பாடுகள் நிறைந்ததும், ஏமாற்றங்கள், இழப்புகள் நிரம்பிய தாகவும் இருக்கலாம். ஆனால் அது தேவனை கனப்படுத்துவதற்கான ஒரு நிச்சய பாதை. இவ்வுலகில் தோல்வி களை சந்தித்தாலும், மறு உலகில் வெற்றி நிச்சயம்.

தானியேலையும் அவனது மூன்று நண்பர்களையும் எண்ணிப் பாருங்கள். அவர்கள் பல்வேறு கலாச்சார மக்கள் மத்தியில் மிகப் பெரிய தியாகம் செய்தவர்கள். தேவ பயமே இல்லாத கடல் போன்ற மக்கள் மத்தியில் அவர்கள் நீதியின் தீவாயிருந்தனர்.

நாம் தேவனை நேசிக்கி றோமா? எல்லாவற்றையும் தியாகம் பண்ணி கிறிஸ்துவைப் பின்பற்ற நாம் ஆயத்தமா?

ஜெர்மனி நாஸி கட்சிகளின் தலைவன் ஹிட்லருக்கு எதிராக தைரிய மாக நின்ற டயட்ரெச் போன் ஹேர்பர் என்ற விசுவாச வீரன் மிகச் சிறந்தவர். அவரது கூற்று கிறிஸ்து "**ஒரு மனிதனை தேவன் அழைக்கிறாரென்றால்; அவன் தனக்காக மரிக்கும் படியே அழைக்கிறார்** " என்பதாகும்.

"நீ படப்போகிற பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப்படாதே, இதோ நீங்கள் பயப்படும் பொருட் டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான்; பத்து நாள் உபத் திரவப்படுவீர்கள்; ஆகிலும் நீ மரண பரியந்தம் உண்மையாயிரு. ஜீவ கிரீடத் தை உனக்குத் தருவேன்" வெளி.2:10 என்று கிறிஸ்து உறுதியளித்திருக்கிறார்.

"ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக் கடவன்" வெளி.2:7.

ஆவிக்குரிய வாழ்வை ஆழப்படுத்துவதற்காக

For the Deepening of the spiritual life

Mayhard James

ஆவிக்குரிய வாழ்வில் கிறிஸ்தவன் ஆவிக்குரிய வல்லமையைப் பெற்றுக் கொள்ள தூய ஆவியானவரின் வழிகாட்டுதலின்படி உபவாசிக்கும் பழக்கம் வேண்டும். அது ஆவியினைப் பணியச் செய்து, சரீரத்தைக் கட்டுப் பாட்டிற்குக் கொண்டு வந்து தன்னைத் தானே ஆராய்ந்து பார்க்கவும், ஆத்து மாவை ஆண்டவர் மீது சார்ந்து கொள்ளவும் செய்கிறது.

வாழ்க்கையில் தேவனுடைய ஆழமான அனுபவங்களைத் தேடுவதற்கு உபவாசம் உதவியாயிருக்கிறது. வயோதிப அன்னாளைப் போல உபவாச ஜெபத்தோடு காத்திருப்பவர்களைப் போன்ற ஏராளமான பக்தர்களின் அனுபவம், தேவன் தாழ்மையுள்ள ஆத்துமாக்களிடம் நெருங்கி வருவது நிச்சயம் என்று நமக்கு உணர்த்துகிறது.

ஜான் கிஸோஸ்டெம் ஒரு ஆரம்ப கால சபையின் பிதா. அவர் பயன் படுத்திய ஒரு பழமொழி "**உபவாசம் ஆத்துமாவைப் பிரகாசிக்கச் செய்து, உயரமாகப் பறக்க சிறகுகளை அளிக்கிறது**".

சீனாவில் உள்நாட்டு மிஷனை ஸ்தாபித்த ஹட்சன் டெயிலர் 19-ம் நூற்றாண்டில் சீனக் கிறிஸ்தவர்கள் மத்தியில் உபவாச ஜெபம் ஏற்படுத்திய விளைவுகளை வெளியிட்டுள்ளார். "ஷான்ஷி என்னுமிடத்தில் அடிக்கடி தனியாகவும் குழுவாகவும் உபவாசத் திலும் ஜெபத்திலும் ஈடுபட்டிருக்கும் சீனக் கிறிஸ்தவர்களைக் கண்டேன். அனேகர் உபவாசத்தை வெறுப்பதை அவர்கள் அறிந்திருந்தனர். உபவாசத் திற்கு தேவன் மேல் வாஞ்சையும் விசுவாசமும் வேண்டும். அவர்கள் தாங்கள் பெலவீனரும், தரித்திரருமா யிருப்பதால் உபவாசம் உண்மையாகவே கிருபையின் வழியாக தேவன் நியமித்த வழி என்று அவர்கள் உணர்ந்தனர்".

"நாம் அதிக பொறுப்புள்ளவர் களென்று எண்ணிக் கொள்வது நமது பணிக்கு மிகுந்த தடை. உபவாசத்தின் மூலம் நமது பலவீனங்களை உணர்ந்து பெலன் கொடுக்கிற தேவன் மேல் சார்ந்து கொள்கிறோம். அவ்வாறு ஆசீர்வாதம் வருகிறது".

சீன உள்நாட்டு மிஷன் சம்பந்த மாக ஒரு கடின பிரச்சனை ஏற்பட்டு விட்டால், ஒரு நாள் முழுவதையும் உபவாசத்தில் செலவிடுகிறோம். அந்த வேளைகளிலெல்லாம் தேவன் தலை யிட்டு எங்கள் முன் சென்று கோணலான வைகளை நேராகுகிறார்.

கிறிஸ்தவர்கள் இவ்வாறு தூய ஆவியானவரின் துணையோடு ஒழுங்காக உபவாசித்து ஜெபித்தால் தேவன் சாத்தானைத் தோற்கடித்துப் பெரிய காரியங்களைச் செய்வார்.

நான் என் வாழ்வில் மறுபடியும் திரும்பிச் செல்ல முடியுமானால்!

Could I retrace my life

William Booth (1829-1912)

எனது கடந்த கால வாழ்வை இன்னொரு முறை வாழும் வாய்ப்பு கிடைக்குமானால் என் ஆரம்ப காலத்திலிருந்த வல்லமை மிக்க வாழ்வு எனக்கு முன்னாக இருப்பதை உறுதிப்படுத்தியிருப்பேன். ஒரு தயக்கமுமில்லாமல் என் வாழ்வை என்னை மீட்ட அன்பின் பலிபீடத்தில் அர்ப்பணித்திருப்பேன். எனது ஆவி, ஆத்துமா, சரீரம் யாவற்றையும் இயேசு கிறிஸ்துவின் பாதத்தில் படைத்து, அவருக்காக வாழவும், பாடுபடவும் முழுமனதுடன் என்னை அர்ப்பணிப்பேன்.

நான் பல வருடங்களுக்கு முன்னால் நான் 15 வயதாக இருக்கும் போதே என் குறைந்த அறிவிற்கேற்ப இந்த அர்ப்பணிப்பை செய்து விட்டேன். அந்நாட்களிலிருந்து என்னில் வந்த ஒளி, அனுபவத்தின் மூலமாகவும், போதனை மூலமாகவும் என் அர்ப்பணிப் போடு இணைந்து விட்டன. இந்த அர்ப்பணிப்பை நான் அன்று செய்ததை விட இன்று முழுமனதோடு செய்திருக்கலாம். மேலும் அர்ப்பணிப்பினைத் தொடர்ந்து செயலில் இறங்கி இயன்ற அளவில் முன்னேறியிருப்பேன்.

"என் தேவனே, நான் உமது மகன், உமது வேலையாள், உமது போர் வீரன். எனவே உமது விருப்பத்திற்கேற்றவைகளை மட்டும் இவ்வுலகில் நிறைவேற்றி, என்னிடம் ஒப்புவிக்கப்பட்டவைகளை முழுமனதோடு செய்வேனாக. அதன் பின்பு நான் உம்மோடு மேலே வந்து நித்திய காலமாக ஆட்சி செய்வேனாக. இந்த நோக்கத்தோடு நன்மைக்கும் தீமைக்குமிடையிலுள்ள போராட்டத்தில் பயனுள்ளவனாயிருப்பேனாக. சமயத்தையோ, பெலனையோ, வாய்ப்புகளையோ விரயம் பண்ண மாட்டேன். எல்லாம் பரிசுத்தமாக்கப்பட்டும் ஸ்நானப்படுத்தப்பட்டும், தூய ஆவியால் உண்மையான தெய்வீக தன்மையைப் பெறட்டும்.

நான் ஒரு தியாகமுள்ள மனிதனாயிருக்க வேண்டும். தரித்திரம், தனிமை, கடின உழைப்பு போன்ற ஏதுவாயிருந்தாலும் என் பரம தகப்பன் வைத்திருக்கும் பாதையை நான் ஏற்றுக் கொள்வேன். பராது சொல்லாமலும் முறுமுறுக்காமலும் கடினங்களை சகித்து முடிவு மட்டும் நிலை நிற்க முயற்சிப்பேன்.

நான் ஒரு ஜெப வீரனாக மாற வேண்டும்

நான் இடைவிடாமல் ஜெபம் செய்யும் வரைக்கும் பரலோகத்தோடு தொடர்பு வைத்துக் கொள்ளும் பழக்கத்தை ஏற்படுத்தவும், என் ஆவி தேவனோடு ஐக்கியம் வைத்து மக்களுக்காக மன்றாடவும், தூய ஆவியை நான் நிறைவாகப் பெற்றுக் கொள்ள கண்ணீர் விடவும் விரும்புகிறேன். நான் கடந்து வந்த பாதையை திரும்பி பார்க்கும் போது எவ்வளவு விலையேறப் பெற்றதும், மதிப்பிட முடியாததுமான ஜெப வாய்ப்பினைப் பெற்றுள்ளேன். இதனை நான் எழுதிக் கொண்டிருக்கும் போதே என் உலக வாழ்வின் இறுதி பகுதியிலிருக்கிறேன் என்பதால் உடனடியாக ஜெபிக்க ஆரம்பிக்கிறேன். நான் பகிரங்கமாகவும் தனியாகவும் எல்லா இடங்களிலும் என் எண்ணமெல்லாம் ஜெபம் என்று மாறும் வரை ஜெபிக்க விரும்புகிறேன்.

நான் தூய்மையாக வாழ விரும்புகிறேன்

நான் மறுபடியும் வாலிபனாகி எனக்கு ஒரு நீண்ட வாழ்வு கொடுக்கப்படுமானால் என் தேவனே, நான் எப்படியும் ஒரு பரிசுத்தவானாய் வாழ வேண்டும். அதன் மூலம் மக்கள் தேவ ராஜ்யத்தின் மேன்மையை அறிந்து கொள்ள வேண்டும் என்று ஜெபிப்பேன்.

மனிதரின் பாடுகளைக் கண்டு மனவுருக்க முடையவனாய் வாழ வாஞ்சிக்கிறேன்

எந்த இடத்திலும், எப்போதும் மனித பாடுகளைக் கண்டு மனதுருகும் ஆவி என்னில் உருவாக வேண்டும். ஆண்களாயிருந்தாலும், பெண்களாயிருந்தாலும், சிறு பிள்ளைகளாயிருந்தாலும், தங்களது பாவத்தாலோ, பிறரது நடத்தையாலோ, காரணம் இல்லாமலோ, துக்கத்திலிருந்தால் அவர்களைக் கண்டு நான் இரக்கம் கொள்ள வேண்டும்.

நான் விசுவாச வீரனாயிருக்க வேண்டும்

தேவனை உத்தமமாக நம்பும் தூய விசுவாசம் என்னில் உருவாக வேண்டும். எந்த சூழலிலும் அவரை நான் விசுவாசிக்க வேண்டும். அது எக்காலத்திலும் என் பழக்கமாயிருக்க வேண்டும்.

மிகக் கடின சூழ்நிலைகள் ஏற்படும் போது தைரியமாக அன்பின் ஆண்டவரின் பாதுகாவல், கொடை, வழிகாட்டுதல் ஆகியவற்றில் நிலைத்திருக்க என்னைப் பழக்கப்படுத்த வாஞ்சிக்கிறேன்.

எக்காலத்திலும், எந்த இடத்திலும் என் பிதாவின் கரம் என்னை எப்போதும் சூழ்ந்திருப்பதையும், எனது அன்பு இரட்சகரின் செட்டைகளின் கீழ் நான் பாதுகாவலுடன் இருப்பதையும், ஆவியானவரின் வெளிச்சம் என்னை வழி நடத்துவதையும், எல்லாம் நன்மைக்கேதுவாகவே நடக்கிறது என்று எடுத்துக் கொள்ளும் உறுதியையும் உடையவனாயிருக்க விரும்புகிறேன்.

ஏதோ சில காரியங்களை என் வாழ்வுடன் ஒப்பிட்டுக் கூறினேன். என் மீதமான நாட்களை அர்ப்பணத்துடன் செலவு செய்வேன். எனது சேவையும் எனது பயபக்தியும் எனது கடமைகளை நிறைவேற்றுவதற்காகவே இருக்க வேண்டும்.

வயோதிபரானாலும், இளைஞரானாலும், இறுதி மூச்சு வரை கடமையை நிறைவேற்றுவது நலம்.

இந்த அர்ப்பணிப்பில் உங்களுக்குப் பங்கு உண்டா? நீங்கள் இன்னும் நீண்ட காலம் வாழலாம். ஆனால் தேவன் உங்களோடிருக்கும் வாழ்வை வாஞ்சியுங்கள்.

சத்திய வசனம்

The word of truth

Arthur W. Pink

பரிசுத்த வேதாகமத்திற்கு அளிக்கப்பட்ட பல பெயர்களில் ஒன்று 'சத்திய வசனம்' என்பதாகும் *2 தீமோ.2:15*. அவை சத்திய தேவனிடமிருந்து நமக்கு அளிக்கப்படுவதால் இவ்வாறு அழைக்கப்படுகிறது *ஏசா.65:16*. அவரிடமிருந்து வரும் வெளிப்பாடு பொய்யாயிருக்க முடியாது *தீத்து 1:2*. இவ்விதமான ஒரு ஆசீர்வாதத்தை நாம் பெற்றுக் கொண்டிருப்பது எத்தனை சிறப்பானது! நாம் வேத புத்தகத்தை கையிலெடுக்கும் போது, மிகுந்த நன்றியுணர்வுடனும், அது பரத்திலிருந்து நமக்கு வந்த செய்தி என்ற நிச்சயத்துடன், அது நமது சொந்த மொழியில் தரப்பட்டது பெரிய சிலாக்கியம் என்றும் எண்ணிப் பார்க்க வேண்டும். விலையேறப் பெற்ற பொக்கிஷம் இது! இதில் எந்தத் தவறும் கட்டுக்கதையும் இல்லை. இது சத்திய வசனம். நம்மை வழி தவறச் செய்வதும் ஏமாற்றுவதுமில்லை. எனவே இதனை நம்பலாம்.

இது விலையேறப் பெற்ற பொக்கிஷம். சபையாலோ, பரிசுத்த தூதர்களாலோ இது உருவாக்கப்படவில்லை. தேவனே நமக்கு அருளிய வசனம் இது. "இருளுள்ள இடத்தில் பிரகாசிக்கிற விளக்கைப் போன்றது" *2 பேது.1:19*. பாவம் நிறைந்த இவ்வனாந்திர யாத்திரையில் விடாய்த்துப் போன பிரயாணிகளான நமக்கு அது ஜீவ தண்ணீராயிருக்கிறது. இது "ஞானமென்று பொய்யாய்ப் பெயர் பெற்றிருக்கிற கொள்கையின் விபரீதம்" *1தீமோ.6:20*. மேலும் "லௌகீக ஞானத்தினாலும் மாயமான தந்திரத்தினாலும்" நிறைந்த பாரம்பரியத்திற்கு எதிரானது *கொலோ.2:8*.

பொய்யும் புரட்டும் நிறைந்த இவ்வுலகில் "தேவன் இப்படி உரைக்கிறார்" என்பது எவ்வளவு விலையேறப் பெற்றது! "அவைகள் பொன்னிலும், மிகுந்த பசும் பொன்னிலும் விரும்பப் படத்தக்கதும், தேனிலும் தேன் கூட்டிலிருந்து ஒழுகும் தெளி தேனிலும் மதுரமுள்ளதுமாயிருக்கிறது" *சங்.19:10*. இத்தகைய சத்திய வேதம் நமக்குக் கொடுக்கப்படாதிருந்தால் எப்படியிருக்கும்? நாம் திசை காட்டும் கருவியில்லாத கப்பற் பிரயாணிகளைப்

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

போலிருப்போம். நமது சிருஷ்டிப்பு, நமது கடமை, நமது இலக்கு ஆகிய வற்றைக் குறித்த ஜாக்கிரதை வேண்டாமா?

தெய்வீக அதிகாரத்தைக் குறித்த சந்தேகங்கள் அகற்றப்பட்டு, தூய தேவ வசனம் சத்தியமானது என்ற உறுதி ஏற்படுவது ஆசீர்வாதமானது. உத்தம மான மக்களில் காணப்படும் ஆழமான பாவ உணர்வும், வேத வசனம் தெய்வீக வெளிப்பாடு என்ற அசையாத நம்பிக்கை யுமே. மனிதருடைய தர்க்கங்களையும் சாத்தானுடைய தாக்குதல்களையும் சத்தியத்தில் உறுதியாயிருப்பவர்களை 'தகர்க்க முடியாத கன்மலையாகிய' தேவனிடமிருந்து பிரிக்க முடியாது. வேறு எதுவும், எவரும் பேசக்கூடாத விதத்தில் அது நம் இருதயத்தில் பேசுவ தால் அது ஒன்றே சத்தியம் என்பதைக் கிறிஸ்தவன் அறிவான். மற்ற அனை வரும் சந்தேகித்தாலும், நாஸ்திகராயிருந் தாலும் அவன் மாறுவதில்லை. அவனது விசுவாசம் மனித ஞானத்தில் நிற்காமல் தேவ வல்லமை மீது நிற்கிறது. எனவே மனித அபிப்பிராயங்களோ, சாத்தானு டைய தந்திரங்களோ அவனை மாற்ற முடியாது. ஏனெனில் சத்திய வார்த்தை களின் யதார்த்தம் அவனுக்குத் தெரிவிக் கப்பட்டுள்ளது. "உம்முடைய வார்த்தை கள் கிடைத்தவுடனே அவைகளை உட் கொண்டேன்; உம்முடைய வார்த்தை கள் எனக்கு சந்தோஷமும் என் இருதயத் துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தது" ஏரே.15:16.

சத்திய வசனத்தில் கொடுக்கப் படும் அன்பு சிறந்த இரக்கத்தை வெளிப் படுத்துகிறது. பொதுவாக எழுத்தாளர் களும், அவர்கள் எழுதுவதை வாசிக்கிற வர்களும் பொய்யராகவே இருக்கி றார்கள் "துன்மார்க்கர்... பொய் சொல்லி வழி தப்பிப் போகிறார்கள்" சங்.58:3. குழந்தைகளுக்குப் பொய் சொல்ல கற்பிக்க வேண்டியதில்லை. அது பிறக்கும் போதே இத்தன்மையுடன் பிறக்கிறது. ஆதி பெற்றோரின் வீழ்ச்சியின் விளைவு இது. அவர்கள் தேவனுடைய சத்தி யத்தை விட பிசாசினுடைய பொய்யை நம்பினார்கள். அந்த விஷக்கிருமி பரம் பரை பரம்பரையாகக் கடந்து வந்து விட்டது. எனவே "உலகம் முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது" 1 யோவா.5:19. "அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறான்" யோவா.8:44. இவ்வாறு நம்மில் சத்தியத் தின் மீது அன்பில்லாமல் மாறாக அதன் மீது வெறுப்பும் எதிர்ப்பும் காணப் படுகிறது. மறுபடியும் பிறவாதவர்கள் தாங்களாகவே சத்தியத்தை அறிய விரும்புவதில்லை. அவர்கள் தங்களைக் குறித்து மற்றவர்கள் புகழ்ந்து பேச அல்லது ஆதரவாயிருக்க விரும்புகி றார்கள். ஆண்டவராகிய இயேசு "....நான் உங்களுக்கு சத்தியத்தை சொல்லுகிற படியினாலே நீங்கள் என்னை விசுவாசிக் கிறதில்லை" யோவா.8:45 என்றார். அவர்களை மகிழ்விக்கக்கூடிய பொய் களைக் கூறியிருந்தால் அவரை வரவேற் றிருப்பார்கள். ஆனால் உலகமோ பொல் லாங்கனுக்குள் கிடப்பதால் மக்கள் பொய் சொல்லுகிறவர்களாகவும் மாய் மாலக்காரராகவும் இருப்பதில் ஆச்சரிய மில்லை. உண்மையென்னவெனில் **"சத்தியம் வீதியிலே இடறி விழுந்து விட்டது"** ஏசா.59:14. அது மிதிக்கப்படுகிறது.

"நாமோ மெய் வழியை நான் தெரிந்து கொண்டேன்" சங்.119:30 என்று உத்தமமாக சொல்ல முடியுமா? தேவ வசனத்தைப் பின்பற்றி சத்தியத்தை உரை கல்லாக வைத்திருப்பவர்கள், "எல்லா வற்றையும் சோதித்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள்" 1 தெச.5:21.

சத்தியத்தின் பாதையை நாம் தெரிந்து கொண்டாலும் ஜெபம் அதிக அவசியம். "பொய் வழியை என்னை விட்டு விலக்கும் சங்.119:29. உம்முடைய சத்தியத்திலே என்னை நடத்தும்" என்று தினமும் கதற வேண்டும்.

2 யோவா.4-ன்படி நாம் சத்தி யத்தில் நடப்பது மகிழ்ச்சிக்குரியது. தேவனும் மகிமைப்படுகிறார். "அவரு டைய வசனம் நமது கால்களுக்குத் தீபமும் பாதைக்கு வெளிச்சமுமா யிருக்கிறது". எனவே வேத வசனத்தின் படி ஒவ்வொரு நாளும் நடந்து உத்தமத் தையும் உண்மையையும் நமது பணி களில் வெளிப்படுத்துவோம். எந்த அளவில் சத்தியத்தில் நடக்கிறோமோ அந்த அளவில் ஆண்டவரின் ஒப்புதலின் மகிழ்ச்சியை நாம் பெற முடியும். "இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளு வான். அவனில் என் பிதா அன்பாயிருப் பார், நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம்" யோவா.14:23. "அவருடைய சத்தியம் நமக்குப் பரிசையும் கேடகமுமாகும்" சங்.91:4. நாம் எதிரிகளிடமிருந்து பாது காக்கப்படவும், அவனைத் தாக்கவும் பயன்படும். தேவனுடைய சர்வாயுத வர்க்கம் தரிக்கப்பட்ட கிறிஸ்தவன் யுத்தக்களத்தில் சாத்தானுடைய தாக்கு தலுக்கு ஆளாகாமல் பாதுகாப்பாயிருப் பான். சத்தியத்தில் நடப்பதால் நமது ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் உண்டு ஏரே.6:16.

வாக்குத்தத்தம் கொடுப்பவரில் விசுவாசம்

Faith in the promise - giver

Charles H. Spurgeon

"...உன் மகா பலம் எதினாலே உண்டாயிருக்கிறது ... என்று நீ எனக்குச் சொல்ல வேண்டும்". நியாய. 16:6

விசுவாசத்தின் இரகசிய பலம் எங்கு இருக்கிறது? அது ஆவிக்குரிய உணவாகிய வேத வசனத்திலிருக்கிறது. விசுவாசம் வாக்குத்தத்தம் என்றால் என்ன என்பதைப் கற்பிக்கிறது. அது தெய்வீக கிருபையின் பெருக்கு, மகா பெரிய தேவனுடைய வழிந்தோடும் இருதயம். "எனது தேவன் இந்த வாக்குத் தத்தத்தை அன்பும் கிருபையுமில்லாமல் தர முடியாது. எனவே அவரது வார்த்தை நிறைவேறும் என்பது முற்றிலும் நிச்சயம்" என்று விசுவாசம் சொல்லுகிறது. பின்பு விசுவாசம் யார் இந்த வாக்குத்தத் தத்தைக் கொடுத்தார்? என சிந்திக்கிறது. "இதன் ஆக்கியோன் யார்?" என்று அதன் மகத்துவத்தை எண்ணுவதில்லை. தேவன் சர்வவல்லவர், அவர் மாறாதவர், பொய் சொல்லாதவர் என்று எண்ணி வாக்குத் தத்தம் நிறைவேறியே தீர வேண்டும் என முடிவுக்கு வருகிறது. இந்த உணர்வுடன் முன்னோக்கி அது முன்னேறுகிறது. ஏன் இந்த வாக்குத்தத்தம் கொடுக்கப் பட்டது? தேவனுடைய மகிமைக் காகவே என்பது நிச்சயம். தேவ மகிமை பாதுகாப்பானது என்றும் அவர் தமது மகிமையை களங்கப்படுத்தவோ, அவரது கிரீடத்தின் பளபளப்பை மங்கச் செய்வோ மாட்டார். எனவே அவரது வாக்குத்தத்தம் நிச்சயமாக நிலைநிற்கும்.

விசுவாசம் கிறிஸ்துவின் ஆச்சரிய மான பணி, பிதாவின் வார்த்தைகளை நிறைவேற்றும் விருப்பத்தின் சரியான நிரூபணமாயிருக்கிறது. தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக் கொடுத்தவர் அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்ப தெப்படி? ரோம.8:32. மேலும் விசுவாசம் கடந்த காலத்தைத் திரும்பிப் பார்க்கிறது. அது நடத்திய போராட்டங்கள் அதை பலப்படுத்தி அதின் வெற்றிகள் தைரி யத்தை அளித்துள்ளன. விசுவாசமானது தேவன் ஒரு போதும் கைவிடுவதில்லை என்று ஞாபகப்படுத்துகிறது. எந்த ஒரு தமது பிள்ளையும் அவரால் ஏமாற்றப் பட்டதில்லை. பயங்கரமான ஆபத்து நேரங்களை நினைவு கூர்கிறேன். விடுதலை கொடுத்தார். பெரிதான தேவைகளில் பெலப்படுத்தினார். "ஒரு போதும் அவர் மாறுவதில்லை, தமது ஊழியக்காரர்களை கைவிட்டு விடுவ தில்லை. இம்மட்டும் உதவி செய்தவர். இனிமேலும் உதவி செய்வார்" என்று விசுவாசம் பெருமிதமடையும்.

வாக்குத்தத்தம் அருளியவரை விசுவாசம் மேற்கூறிய பார்வையுடனேயே நோக்கும். எனவே "என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்" என்று கூற முடியும்.

உங்கள் கவனத்திற்கு

நீங்கள் கடிதம், காணிக்கை அனுப்பும் ஒவ்வொரு தடவையும், உங்கள் பத்திரிக்கை பதிவு எண், தொலைபேசி எண் இரண்டையும் கட்டாயம் எழுதுங்கள்.

(மாதிரிக்காக) **வாசகர் ஒருவரின் முகவரி**

VN 00980 M (பதிவு எண்)
Pr. Arputharaj E.
Jesus Children Ministry
Tirumalapuram, Villupanur P.O
Srivilliputhur, Virudhunager Dt.
Pin Code - 626 138
Cell: 97860 78840 (தொலைபேசி எண்)

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

4. அப்பொழுது ஏசாயாவுக்கு உண்டான கர்த்தருடைய வார்த்தையாவது:
5. நீ போய் எசேக்கியாவை நோக்கி: உன் தகப்பனாகிய தாவீதின் தேவனாயிருக்கிற கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், உன் விண்ணப்பத்தைக் கேட்டேன்; உன் கண்ணீரைக் கண்டேன்; இதோ, உன் நாட்களோடே பதினைந்து வருஷம் கூட்டுவேன்.
6. நான் உன்னையும் இந்த நகரத்தையும் அசீரியா ராஜாவின் கைக்குத் தப்புவித்து, இந்த நகரத்துக்கு ஆதரவாயிருப்பேன்.
7. இதோ, ஆகாசுடைய சூரிய கடியாரத்தில் பாகைக்குப் பாகை இறங்கின சாயையைப் பத்துப் பாகை பின்னிட்டுத் திருப்புவேன் என்றார். ஏசா.38:1-7

மூன்று இராஜாக்களைக் குறித்து சில குறிப்புகளை மாத்திரம் வாசகருக்கு எழுதுகிறேன்.

I. தாவீது

1. தாவீதை கர்த்தர் அபிஷேகம் பண்ணினார்:

...அவன் சிவந்த மேனியும், அழகிய கண்களும் நல்ல ரூபமுமுள்ளவனாயிருந்தான்; அப்பொழுது கர்த்தர் இவன்தான், நீ எழுந்து இவனை அபிஷேகம் பண்ணு என்றார்.

அப்பொழுது சாமுவேல்: தைலக் கொம்பை எடுத்து, அவனை அவன் சகோதரர் நடுவிலே அபிஷேகம் பண்ணினான்; அந்நாள் முதற்கொண்டு, கர்த்தருடைய ஆவியானவர் தாவீதின் மேல் வந்து இறங்கியிருந்தார்; 1சாமு.16:12,13

2. தாவீதின் வம்சத்தில் இயேசு கிறிஸ்து பிறந்தார்:

அம்மினதாப் நகசோனைப் பெற்றான்; நகசோன் சல்மோனைப் பெற்றான்.

சல்மோன் போவாசைப் பெற்றான்; போவாஸ் ஓபேதைப் பெற்றான்.

ஓபேத் ஈசாயைப் பெற்றான்; ஈசாய் தாவீதைப் பெற்றான். ரூத் 4:20-22.

ஆபிரகாமின் குமாரனாகிய தாவீதின் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினுடைய வம்ச வரலாறு: மத்.1:1

3. தாவீதின் குமாரனே என்று இயேசுவை குருடன் கூப்பிட்டான்:

...பர்திமேயு என்கிற ஒரு குருடன். வழியருகே உட்கார்ந்து பிச்சை கேட்டுக் கொண்டிருந்தான்.

அவன் நசரேயனாகிய இயேசு வருகிறாரென்று கேள்விப்பட்டு: இயேசுவே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று கூப்பிடத் தொடங்கினான் மாற்.10:46,47.

தாவீதைக் குறித்து தேவன் கொடுக்கும் சாட்சி என்ன?

"பின்பு அவர் அவனைத் தள்ளி, தாவீதை அவர்களுக்கு ராஜாவாக ஏற்படுத்தி, ஈசாயின் குமாரனாகிய தாவீதை என் இருதயத்துக்கு ஏற்றவனாகக் கண்டேன்; எனக்குச் சித்தமானவைகளையெல்லாம் அவன் செய்வான் என்று அவனைக் குறித்து சாட்சியும் கொடுத்தார்" I have found David the son of Jesse, a man after mine own heart, which shall fulfil all my will அப்.13:22.

தேவன் உங்களைக் குறித்து எனக்குப் பிரியமானவன், பிரியமானவள், எனக்கு சித்தமானவைகளையெல்லாம் செய்வான்/செய்வாள் என்று சாட்சி கொடுப்பாரா?

II. சாலொமோன்

1. சாலொமோன் ஆலயம் கட்டினான்:

தேவன் மெய்யாக மனுஷரோடே பூமியிலே வாசம் பண்ணுவாரோ? இதோ, வானங்களும், வானாதி வானங்களும் உம்மைக் கொள்ளாதே, நான் கட்டின இந்த ஆலயம் எம்மாத்திரம்? 2 நாளா.6:18.

2. சாலொமோன் முழங்காற்படியிட்டான்:

...ஒரு வெண்கலப் பிரசங்க பீடத்தை உண்டாக்கி, அதை நடுப்பிரகாரத்திலே வைத்திருந்தான்; அதின் மேல் அவன் நின்று, இஸ்ரவேலின் சபையார் எல்லாருக்கும் எதிராக முழங்காற்படியிட்டு, தன் கைகளை வானத்திற்கு நேராக விரித்து: 2 நாளா.6:13.

ஆங்கிலத்தில் Solomon kneeled down upon his knees என்றிருக்கிறது. நீங்கள் முழங்காற்படியிடுகிறீர்களா? Are you kneeled down upon your knees? உங்கள் வயதின் காரணமாக முழங்காற்படியிட முடியாமல் இருக்கலாம், ஆனால் ஜெபிக்கிறீர்களா? அருமையான ஒரு வசனத்தை மாத்திரம் எழுதி கடந்து போகிறேன்.

தானியேலோ வென்றால், அந்தப் பத்திரத்துக்குக் கையெழுத்து வைக்கப்பட்டதென்று அறிந்த போதிலும், தன் வீட்டுக்குள்ளே போய், தன் மேல் அறையிலே எருசலேமுக்கு நேராகப் பலகணிகள் திறந்திருக்க, அங்கே தான் முன் செய்து வந்தபடியே, தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம் பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினான் தானி.6:10.

3. சாலொமோன் ஜெபம் பண்ணி முடிக்கிற போது, அக்கினி இறங்கினது:

சாலொமோன் ஜெபம் பண்ணி முடிக்கிற போது, அக்கினி வானத்திலிருந்து இறங்கி, சர்வாங்க தகனபலியையும் மற்ற பலிகளையும் பட்சித்தது; கர்த்தருடைய மகிமையும் ஆலயத்தை நிரப்பிற்று 2 நாளா.7:1

III. எசேக்கியா

எசேக்கியா கர்த்தரை நோக்கி: நான் உமக்கு முன்பாக உண்மையும் மன உத்தமமுமாய் நடந்து, உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன் என்பதை நினைத்தருளும் என்று விண்ணப்பம் பண்ணி, **எசேக்கியா மிகவும் அழுதான்.**

அப்பொழுது ஏசாயாவுக்கு உண்டான கர்த்தருடைய வார்த்தையாவது:

உன் விண்ணப்பத்தைக் கேட்டேன்; உன் கண்ணீரைக் கண்டேன்

என்றார். ஏசா.38:3-5

தேவனுடைய ஊழியத்தை அதிகமாய் நேசிக்கிற சில தேவனுடைய பிள்ளைகள் மாதந்தோறும் **வருகையின் தூதன்** ஊழியத்தை தாங்கி வருகிறார்கள். சில கர்த்தருடைய பிள்ளைகள் வருடத்திற்கு ஒரு முறை ரூபாய் 1000, 2000 அல்லது அதற்கு அதிகமாக **சிறப்பு காணிக்கை** அனுப்புகிறார்கள். இவர்களை உற்சாகப்படுத்த **மாத காணிக்கை** அனுப்புகிற கர்த்தருடைய பிள்ளைகளுக்கும், **சிறப்பு காணிக்கை** அனுப்புகிற தேவனுடைய பிள்ளைகளுக்கும் வருடந்தோறும் **சிறப்பு பரிசு** அனுப்பி வருகிறோம். இந்த ஆண்டு நீங்களும் சிறப்பு காணிக்கை அனுப்புங்கள்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உங்கள் அன்பு சகோதரன்
வெஸ்லி தேவதாசன்
(WESLEY DEVADASON)

முக்கிய அறிவிப்பு

10-ம் தியதிக்குள் பத்திரிகை வரத் தவறினால் உடனே தகவல் தாருங்கள்.
Mobile : **95432 21008**
Whatsapp : **94897 40295**
e-mail:varukayinthoothan@hotmail.com

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

சிந்தனைக்கு

சபை கிறிஸ்துவுக்காக எந்த தியாகத்தையும் செய்யக் கூடியதாகவும், பிறருக்காகவே வாழுவதாகவும் இருக்கும்.

விசுவாசியின் வாழ்வில் **பாவம்** தன் பிடியை வைத்திருக்குமானால் தேவ வசனத்தின்படி அங்கு ஊக்கமான **ஜெப** வாழ்வு இருக்க முடியாது.

"உங்கள் சூழ்நிலை மாறும்படி ஜெபிப்பதற்கு முன்னால் உங்கள் குணம் மாறும்படி ஜெபியுங்கள்" - **ஜான் ஆலன் லாவென்டெர்.**

"**உபவாசம்** ஆத்துமாவைப் பிரகாசிக்கச் செய்து, உயரமாகப் பறக்க சிறகுகளை அளிக்கிறது" - **ஜான் கிஸோடெம்** (ஒரு ஆரம்ப கால சபையின் பிதர்)

சில பாவங்களின் **பாரம்** நம்மை உணர்வற்றவர்களாகவோ செயல்பட முடியாதவர்களாகவோ ஆக்கி விடலாம்.

நமது **கலாச்சாரம்** சிறிய பாவங்களை நாம் உணரக் கூடாதவர்களாக்கிவிட்டன.

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason